# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2051 • பிப்ரவரி 15, 2020 Weekly E-paper • February 15, 2020




# இது பொறுப்பதில்லை!

• சுப.வீரபாண்டியன்

## செருப்பரசியல்



‘பைந்தமிழ்’ பாபு

## பள்ளிக்குள் ‘இஸ்கான்’

தலையங்கம்

## இராணுவத்தில் பெண்கள்?



மா.உதயகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2051 • பிப்ரவரி 15, 2020    Weekly E-paper • February 15, 2020


# இது பொறுப்பதில்லை!

• சுப.வீரபாண்டியன்

ஜமாலியா மிலியா இஸ்லாமியா பல்கலைக் கழகத்தில், இரண்டு மாதங்களுக்கு முன் நூலகத்தில் நடைபெற்ற காவல்துறையின் தடியடிக் காணொளி இப்போது வெளிவந்துள்ளது.

படிக்கும் மாணவர்களை அடிக்கும் காட்டுமிராண்டித்தனம் இதுவரையில் நாம் அறிந்திராத ஒன்று. "அப்படி எதுவும் நடக்கவில்லை. நூலகத்திற்குள் காவல்துறை நுழையவில்லை" என்று அமித் ஷா சொன்னது ஒரு பச்சைப் பொய் என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

ஜமியா பல்கலைக்கழகம் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு (1920), அலிகாரில் நிறுவப்பட்டது. பிறகு 1925 இல் தில்லிக்கு மாற்றப்பட்டது. 1988 ஆம் ஆண்டு அது மத்தியப் பல்கலைக்கழகமாக அறிவிக்கப்பட்டது. இஸ்லாமிய மாணவர்கள் எண்ணிக்கையில் அங்கு கூடுதலாக இருந்தபோதும், பல்வேறு மதத்தினருக்கும் அங்கு கல்வி தரப்படுகிறது. இந்தியாவின் மிகச் சிறந்த கல்விக்கூடங்களில் ஒன்றாக அது கருதப்படுகிறது.



2006 ஆம் ஆண்டு அங்கு வந்த சவூதி மன்னர், ஒரு பெரிய நூலகம் கட்டுவதற்காக, 30 லட்சம் டாலர்களை நன்கொடையாகக் கொடுத்தார். அந்தப் பணத்தில் கட்டப்பட்ட ‘ஜாகீர் உசேன்’ நூலகத்தில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் மீதுதான் காவல்துறை உள்நுழைந்து தடியடி நடத்தியுள்ளது.

இந்தியக் குடியுரிமைச் சட்டத் திருத்தத்திற்கு எதிராக இன்று இந்தியா முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கடந்த டிசம்பர் 15 அன்று, ஜமாலியா பல்கலை மாணவர்களும் தங்கள் போராட்டத்தைத் தொடங்கினர். அப்போதுதான் காவல்துறை கல்வி வளாகத்திற்குள் நுழைந்து மாணவர்களை அடித்து நொறுக்கியது.

நூலகத்திற்குள்ளும் உட்புகுந்து, படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களையும் தடிகளால் அடித்த காட்சிதான் இப்போது வெளியாகியுள்ளது. எங்களின் மறைவிடங்களிலெல்லாம் அடித்தார்கள் என்று மாணவர்கள் சிலர் கூறுகின்றனர். அதற்கு எத்தனை உள்நோக்கம் இருந்திருக்கும் என்பதை நம்மால் உணர முடிகிறது.

படிக்கிறவனை அடிக்கிற அரசுதான் இன்று மத்தியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பார்ப்பனர்களுக்கு மட்டுமே என்று ஏகபோகமாக இருந்த கல்வி இன்று அனைவருக்கும் என்றாகிவிட்டதைப் பொறுக்க முடியாதவர்கள் இப்படிக் கொடூரமாக நடந்து கொண்டுள்ளனர் என்றே தோன்றுகிறது.

"இது பொறுப்பதில்லை" என்னும் நிலைக்கு நாட்டில் ஒரு பதற்றமான சூழலை அரசு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

பார்ப்பன-பாசிச அரசின் முகம் இப்படித்தான் இருக்கும் என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்! •

# செருப்பரசியல்

● 'பைந்தமிழ்' பாபு

அவன் என் கால்ல கெடக்குற செருப்புக்கு ஈடாவானா?,

அவன் என் செருப்புல இருக்குற தூசுக்குச் சமம், யார்ட்டல பேசுற செருப்ப கழட்டி அடிச்சிருவேன், என்ன எதித்தா பேசுற செருப்பு பிஞ்சுரும் நாயே இப்படியான சொல்லாடல்கள் சமூகத்தில் இன்றும் இருப்பதைப் பார்க்கிறோம்.

காலில் போட்டு நடக்க மட்டுமே கண்டுபிடிக்கப்பட்ட செருப்பு இந்தச் சமூகத்தில் எப்படியெல்லாம் கருதப்படுகிறது? ஒருவரை இழிவுபடுத்த,

கோபத்தை வெளிக்காட்ட,

எதிர்ப்பைப் பதிவு செய்ய,

அதிகார வர்க்கத்தின் அடையாளச் சின்னமாக,

உயர் சாதியின் உரிமையாக,

ஒடுக்கப்பட்டோரின் ஏக்கமாக, என செருப்புக்குப் பின்னால் இருக்கிற அரசியல் நீண்ட வரலாறு கொண்டது.



மனுஸ்மிருதியில் சொல்லியிருக்கிறபடி பிரம்மனின் கால் பகுதி சூத்திரத்தன்மையுடையது என்பதால், காலில் போடும் செருப்பு, தாழ்வாகக் கருதப்படுகிறது.

ராமன் செருப்பை வைத்துப் பதினான்காண்டு காலம் பரதன் ஆண்டான் என்கிறது இராமாயணம். இழிவாகக் கருதப்படுகிற செருப்பு எப்படி நாடாண்டது? ஆதிக்கவர்க்கத்தைப் புனிதமாகவும், உழைக்கும் மக்களைத் தீட்டாகவும் பார்க்கிற பொதுப்புத்தியை உருவாக்கிடவே இந்த வேதங்களும் புராணங்களும் என்பது இப்போது விளங்குகிறதா? "உண்மையிலேயே இந்த நாட்டை யார் ஆண்டாலும் எனக்குக் கவலையில்லை. ஒரு காலத்தில் ஒரு ஆரியனின் செருப்பு 14 வருஷ காலம் இந்த நாட்டை அரசாண்டதாக உள்ள கதையைப் பக்தி விசுவாசத்தோடு படிக்கும் மக்களுக்கு மனிதனே அல்லாமல் ஓர் மிருகம் நாய், கழுதை ஆண்டால் கூட அது அதிகமான அவமானம் என்றோ குறை என்றோ நான் சொல்ல வரவில்லை" என்றார் தந்தை பெரியார்.

பார்ப்பனர்களும் ஆதிக்கசாதியினரும் போடும் செருப்பை, தீண்டப்படாதவர்களும், பெண்களும் போடக் கூடாது என்று எழுதப்படாத சட்டங்கள், இந்த நாட்டில் பின்பற்றப்பட்டு வந்தன. செருப்புகள் உயர்சாதிச் சின்னமாகத்தான் இருந்திருக்கின்றன என்பதற்கான சான்றுகளும் போராட்ட வரலாறுகளும் ஏராளம்.

எழுத்தாளர் பூமணி எழுதிய 'வெக்கை' என்ற நாவலைத் தழுவி எடுக்கப்பட்ட வெற்றிமாறன் இயக்கிய 'அசுரன்' திரைப்படத்தில் வரும் ஒரு காட்சி இப்படி அமைந்திருக்கிறது "கோவிலிலிருந்து வீடு திரும்புகிற மாரியம்மாவின் காலில் முள் குத்திவிடும். உடனே அவளது மாமா சிவசாமி செருப்பு தைப்பவரிடம் போய் ஒரு செருப்பு தச்சுக்குடு என்பார். செருப்பு தைப்பவர் முதலாளிக்கா எனக் கேட்பார். செருப்பு என்ன முதலாளி மட்டும்தான் போடணுமா இது இந்த சிவசாமி பொண்டாட்டிக்கு என்பதற்குள் , எதுக்குப்பா இந்த தேவையில்லாத வேலை என செருப்புத் தைப்பவர் கூறுவார்." செருப்பு என்பது "உடைமை"யாகக் கருதப்பட்டது அல்ல!!! அது "உரிமை"யாகப் பார்க்கப்பட்டது. என்பதற்கு சாட்சி இந்தக் காட்சி. இது கற்பனையல்ல அன்றைய சமூகச் சூழல் அப்படித்தான் இருந்தது. இதன் மூலமே ஒடுக்குமுறையின் அளவை நாம் புரிந்து கொள்ள முடியும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் செருப்பணிந்து பொதுவில் நடக்கத் தடையும், அப்படியும் அணிந்து வருபவர்கள் உயர்சாதிக்காரர்கள் எதிரே வரும் பொழுது அதைக் கழட்டிக் கக்கத்தில் வைத்துக் கொண்டு, அவர்கள் கடந்த பிறகே போட்டுக் கொள்ள வேண்டும் என்றுமிருந்தது. "உரிமை இல்லாத இடத்தில் உடைமை சுமையாகும்"என்பதற்கேற்ப செருப்பு சுமையாக மாறியது.

இந்த சமூக அவலங்களுக்கெதிராக போராட்டம் நடத்தி, செருப்புப் போடும் உரிமையை பெற்றுத் தந்தவர்கள் தமிழகத்தில் தந்தை பெரியாரும் கேரளத்தில் அய்யன் காளியும். அதனால் தான் என்னவோ இறந்து 40 ஆண்டுகளுக்கு மேலாகியும் தந்தை பெரியார் மீதான கோபம் இந்த ஆதிக்க சாதி வெறியர்களுக்கு குறையவில்லை. அவரின் சிலைக்கு செருப்பு மாலை போட்டு அவரை அவமானப்படுத்தி விட்டதாகக் கருதி ஆனந்தமடைகிறார்கள். அந்த அறிவிலிகளுக்குத் தெரியவில்லை, இப்படிப்பட்ட எதிர்ப்பை யெல்லாம் நேரிலேயே எதிர்கொண்டவர் தந்தை பெரியார்.

ஒரு முறை கடலூரில் ரிக்சாவில் போய்க் கொண்டிருந்த பெரியார் மீது செருப்பு வீசப்பட்டது. ரிக்சாவில் விழுந்த அந்தச் செருப்பைக் கையில் எடுத்து கொண்டு, ரிக்சாவைத் திருப்பச் சொல்லி, மற்றொரு செருப்பைத் தேடி எடுத்து, ஒரு ஜோடியாக இருந்தால் பயன்படுமே என்றவர் அவர். பின்னாளில்அதே இடத்தில் பெரியாருக்குச் சிலை எழுப்பி, சிலையின் பீடத்தில் 'செருப்பொன்று போட்டால் சிலை ஒன்று முளைக்கும்' என்று கவிஞர் கருணானந்தம் எழுதிய கவிதையும் செதுக்கப்பட்டது.

இதைவிடச் சேலத்தில் நடந்த செருப்பு வீச்சு சம்பவம் தமிழக அரசியலில் இன்றைக்கு பெரும் புயலைக் கிளம்பியிருக்கிறது. துக்ளக் இதழின் 50-ம் ஆண்டு விழாவில் பேசிய நடிகர் ரஜினிகாந்த், "1971-ல் சேலத்தில் பெரியார் அவர்கள் , ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியையும், சீதாவையும் உடை இல்லாமல் செருப்பு மாலை போட்டு ஊர்வலம் கொன்டு போனார்கள். அதை யாரும் செய்தித்தாளில் போடவில்லை. அதை சோ துக்ளக் அட்டையில் போட்டுக் கடுமையாக விமர்சித்தார். இதனால் திமுக அரசுக்கு பெரிய கெட்ட பெயர் வந்தது. இதனால் துக்ளக் பத்திரிகை பிரதிகளைக் கைப்பற்றினார்கள்.

எனினும் பிளாக்கில் துக்ளக் பத்திரிகை விற்பனையாகியது " என பேசினார். உண்மைக்கு புறம்பாக ஆதாமின்றி பேசியதற்கு எதிராக திராவிட இயக்கத்தினர் மட்டுமின்றி பொதுமக்களிடமிருந்தும் பெரும் கண்டனங்கள் கிளம்பின. ஊர்வலத்தில் என்ன நடந்தது என்பதைப் பெரியாரே விளக்குகிறார்

"சேலத்தில் மூடநம்பிக்கை ஒழிப்பு மகாநாடு நடத்திட்டு இருந்தேன். ஜனங்களிடம் இருந்து ஆதரவு இருந்தது. அதுல கடவுள்

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**ஸ்ரீவித்யா**

**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com**
**www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-2472 6408**

**2-ஆம் பக்கத் தொடர்ச்சி**

பத்தின ஆபாசத்தை பத்தியும்தான் வெளியிட்டு இருந்தேன். கடவுள் இல்லை கண்டிக்குற மாதிரி. அங்கே ராவணனை கொளுத்தினா, இங்கே ராமனைக் கொளுத்த ஏற்பாடு பண்ணி அதற்குக் காரணம் சொல்லுற விதமா இத பண்ணான், அத பண்ணானு அட்டையில் எழுதி, துணியில் எழுதி ஊர்வலத்தில் விட்டேன். ஊர்வலத்தில் ராமன், அவன் பொண்டாட்டி சிலையா இருக்கிற மாதிரி, புராணத்தில் என்ன இருக்குதோ அதையே செய்தேன், நானா கற்பனை செய்யல. அந்த ஊருல இருந்த தேவாலயப் பாதுகாப்புச் சங்கம் கருப்பு கொடி காமிச்சுக்கிட்டு வந்தான். நம்ம ஆளுங்க ராமன் ஒழிகன்னு சொல்ல, ஆனா அவன் நம்ம பேரை சொல்லி ஒழிகன்னு சொல்லிட்டான். அந்த கூட்டத்தில இருந்த ஒருத்தன் கால்ல இருந்த செருப்பை கழட்டி எறிஞ்சிட்டான். நம்ம கூட்டத்தில வந்து விழுந்தது. அதை எடுத்தவங்க அதவச்சே ராமன் படத்தை அடிச்சாங்க. ஒருத்தன் அடிச்சான், இரண்டு பேர் அடிச்சான், அப்புறம் சுத்தி அந்த படத்தை அடிச்சாங்க..இத எடுத்துகிட்டாங்க.

ராமனை செருப்பால அடிச்சுட்டாங்க, செருப்பால அடிச்சவங்களுக்கா உங்களோட ஓட்டுனு பிரச்சாரம் பண்ணான். ஒரு பத்திரிகை நடத்தினான் இன்னமும் நடக்குது..சோ னு என்னமோ. 3 லட்சம் சுவரொட்டி விளம்பரம், அதுல நான் செருப்போட இருக்குற மாறியும் எதுத்தாப்ல ராமன் படம், பக்கத்தில கருணாநிதி சபாஷ்னு சொல்லுற மாறியும் ஊரெல்லாம் ஒட்டுனாங்க ” . இராமனைச் செருப்பால் அடிப்பதற்கு முன்பாக 138 இடங்களில் வென்றிருந்த திமுக சேலம் நிகழ்விற்கு பின் நடந்த தேர்தலில் 183 இடங்களில் வெற்றி பெற்று வரலாறு படைத்தது.

இனி இராமனைச் செருப்பால் அடித்து விட்டுத்தான் ஓட்டு கேட்க வேண்டும் என்றனர் அன்றைய திமுகவினர் .

அண்மையில் நீலகிரியில் நடைபெற்ற விழாவுக்குச் சென்றிருந்த தமிழக வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் அங்கிருந்து ஒரு பழங்குடியினச் சிறுவனை "டேய் இங்க வாடா வந்து செருப்ப கழட்டி விடுடா" என்றது பெரும் சர்ச்சைக்குள்ளானது. பின்னர் அமைச்சர் அந்த சிறுவனிடமும் அவனது குடும்பத்தினரிடமும் மன்னிப்புக் கேட்டதை நாம் அறிவோம்.

இதைப் போலவே உத்திரப்பிரதேசத்தில் சிறுதொழில் மேம்பாட்டுத்துறை அமைச்சராக இருக்கும் லட்சுமி நாராயன் சிங், யோகா நாள் அன்று யோகா செய்து முடித்ததும் அவருக்கு அதிகாரி ஒருவர் செருப்பு மாட்டிவிட்டார். இது குறித்து பத்திரிக்கையாளர்கள் கேள்வி எழுப்பும் போது - இது ராமன் வாழ்ந்த பூமி, இங்கு 14 ஆண்டுகள் வெறும் செருப்பை வைத்தே ஆட்சிநடந்தது, ஆகையால் செருப்பு புனிதமானது, எனக்குச் செருப்பு மாட்டிவிட்ட அதிகாரிக்கு புண்ணியம் கிடைக்கும் என்று பதிலளித்தார்.

இப்படிப் பல்வேறு நிகழ்வுகளை உலக வரலாறு செருப்பு பற்றி பதிவு செய்துள்ளது. காரணம் அது வெறும் செருப்பு அன்று. அதற்குப் பின்னால் வரலாறும், வலியும், அரசியலும் உள்ளன.

●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## பள்ளிக்குள் ‘இஸ்கான்’

பள்ளியில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு இலவச உணவுத்திட்டத்தை இந்தியாவிற்கே முதல் முதலாக முன்மொழிந்தார் ராவ் சாகிப் எல்.சி.குருசாமி. அதை முதல்முறையாக சென்னை மாநகராட்சி அளவில் நடைமுறைப்படுத்தினார் சர்.பிட்டி.தியாகராயர்.

பின்வந்த காலங்களில் பெருந்தலைவர் காமராஜர், அறிஞர் அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகிய முன்னாள் தமிழக முதல்வர்கள் இந்த உணவுத்திட்டத்தை சத்துணவுத் திட்டமாகப் படிப்படியாக மாற்றினார்கள்.

இதில் எந்த வேறுபாடோ, சாதியோ, மதமோ இல்லை.

குறிப்பாகச் சொன்னால் ‘மனுவாதம்’ என்ற சாதிய, மத வேறுபாடுகளுக்கு இடமில்லை என்றே சொல்லவேண்டும். இந்தத் திட்டமும், திட்டத்தைச் செயல்படுத்திய முறையும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்பட்டன.

இந்தத் திட்டத்தால் சத்துணவுப் பணியாளர்களாக ஒடுக்கப்பட்ட, மிகமிகப் பின்தங்கியவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்தன.

ஆனால், இப்பொழுது நிலைமை தலைகீழாக மாறிவருகிறது. சென்னை மாநகராட்சியில் உள்ள 24 பள்ளிகளில், 5,785 மாணவர்களுக்கு மட்டும் காலைச் சிற்றுண்டி கொடுக்கும் திட்டத்தை தமிழக அரசு தொடங்கியிருக்கிறது.

இந்தத் திட்டத்தை ‘இஸ்கான்’ என்ற நிறுவனத்திடம் தமிழக அரசு ஒப்படைத்திருக்கிறது.

‘அரே கிருஷ்ணா’ என்ற இயக்கத்தை தொடங்கிய அமைப்புதான், 1966-ஆம் ஆண்டு இந்த ‘இஸ்கான்’ என்ற நிறுவனத்தைத் தொடங்கியது.

சென்னையில் மையப்பகுதியில் அமைந்துள்ள கிரீம்ஸ் சாலையில் 20,000 சதுர அடியும், பெரம்பூர் பேரக்ஸ் பகுதியில் 35,000 சதுர அடியும் கொண்ட நிலங்களை இஸ்கான் அமைப்புக்குத் தமிழக அரசு தாரை வார்த்துக் கொடுத்திருக்கிறது.

இந்த இரு இடங்களில் உள்ள நிலங்களின் இன்றைய மதிப்பு ஏறத்தாழ 500 கோடிக்கும் மேல் என்கிறார்கள் வல்லுநர்கள்.

இதுபோதாதென்று தமிழக ஆளுநர் பன்வார்லால் புரோகித் ரூ.5 கோடியை இலவச நிதியாக அள்ளிக்கொடுத்திருக்கிறார். எல்லாம் அரசுப் பணம், மக்களின் பணம்.

லட்சக்கணக்கான சத்துணவுப்பணியாளர்களின் உழைப்பில் நடைபெற்று வந்த இச்சத்துணவுத் திட்டம், யாருக்கும் தெரியாமல், எந்த ஒப்பந்ததாரர்களுக்கும் அறிவிக்காமல் தனி உடமையான ‘இஸ்கான்’ என்ற தனியாரிடம் ஒப்படைக்க வேண்டிய காரணம் என்ன?

இந்த ‘இஸ்கான்’ இந்து மத ‘மனுவாத’த்தை முழுமையாகக் கடைப்பிடிக்கும் நிறுவனம். ‘வெள்ளைப்பூண்டு-வெங்காயம்’ போன்ற மருத்துவ குணப் பொருள்களை உணவில் சேர்க்கமாட்டார்கள். காரணம் அது தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய உணவு வகை என்கிறது வேத மனுவாதம்.

ஆர்.எஸ்.எஸ் - பாஜக இந்துத்துவ அரசின் சனாதனக் கொள்கையை, மத்திய அரசின் அடிமையான தமிழக அரசு ‘இஸ்கான்’ மூலம் முன்னிலைப்படுத்தியது கண்டனத்திற்குரியது.

# இந்திய இராணுவத்தில் பெண் விடுதலை!

● மா.உதயகுமார்



காதலர் நாள் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. பெண்கள் காதலிக்கும் உரிமையை இன்று உலகம் ஏற்றுக் கொள்கிறது. இந்தியாவில் ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. காதலை மறுத்த சமூகத்தில் காதலர் நாள் ஒரு வெற்றிக்குறியீடு. ஆனால் பெண்களை மென்மையாக அழகு தேவதையாக வர்ணித்துக் காதலிக்கும் ஆண்கள் மனம், பெண்கள் கட்டளையிடுவதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. பெண்கள் காதல் உரிமையை ஏற்றுக்கொள்ளும் ஆண்கள், பெண்கள் கட்டளையிடும் உரிமையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

உச்சநீதிமன்றத்தில் நடந்து வரும் இந்திய இராணுவத்தின் பெண் அதிகாரிகளுக்கான கட்டளையிடும் பணிகளுக்கான வழக்கு இதற்குச் சான்றாக உள்ளது. இவ்வழக்கில் நீதிபதிகள் அதிர்ந்து போகும் அளவிற்கு மத்திய அரசு ஒன்றைச் சொல்லியிருக்கிறது. இராணுவத்தில் அதிக அளவில் ஆண்கள் இருப்பதாலும், அதிலும் அவர்கள் கிராமப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாக இருப்பதாலும், இங்கு நிலவும் சமூக கட்டமைப்பின் படியும், பெண் அதிகாரிகளின் கட்டளையை ஏற்றுக் கொள்ளப் படைகள் மனதளவில் உருவாக்கப்படவில்லை என்று சொல்லி இருக்கிறது. மேலும் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா "பெண்கள் ஆண்களுக்குச் சமமாக வருவதற்குப் போராடக் கூடாது. அவர்கள் ஆண்களை விட இன்னும் மேலானவர்கள்" என்றொரு வாதத்தை வைத்திருக்கிறார். இதில் அப்பட்டமான அவரின் இந்துத்துவ மனநிலை தெரிகிறது.

2010ஆம் ஆண்டு டெல்லி உயர் நீதிமன்றத்தால் பெண் அதிகாரிகளுக்குப் குறுகியகால சேவை ஆணையத்திற்குப்(Short Service Commission) பின் நிரந்தர ஆணையத்தை(permanent commission) கொடுக்க கப்பல் படைக்கு உத்தரவிடப்பட்டது. இதை எதிர்த்துத் தான் இந்திய அரசின் பாதுகாப்புத்துறை உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருக்கிறது. இவ்வழக்கில் அரசுத் தரப்பில் செய்யப்படும் வாதங்கள் மிகவும் பிற்போக்கானதாக இருந்துவருகின்றன. ஆணாதிக்கத்தை எதிர்த்துப் பெண்களே இவ்வழக்கைத் தொடுத்திருக்கிறார்கள். பபிதா புனியா மற்றும் பலர், இராணுவத்தில் இருக்கும் பெண் அதிகாரிகளின் சார்பில் தொடுத்த இவ்வழக்கில் சனாதன (அ)தர்மங்களை நீதிமன்றத்தில் வாதங்களாக எடுத்து வைக்கிறது மத்திய அரசு.

பெண்களால் 'Front-line combat' என்று சொல்லப்படும் நேரடியாகப் போர் நடக்கும் இடங்களில் கட்டளையிட்டுப் பணி செய்ய முடியாது என்றும் அவர்களுடைய உடலியல் அமைப்பு அதற்கு ஏற்புடையது அல்ல என்றும் வாதங்களை அரசு முன்வைத்திருக்கிறது. பெண்கள் வீட்டிற்கு வெளியே வரக்கூடாது என்று சொன்னவர்கள் படிப்படியாக ஒவ்வொரு காலகட்டத்திலும் அந்தந்த காலகட்டத்தில் ஏற்படக்கூடிய முன்னேற்றங்களை மறுத்தும், பின்னர் ஏற்றும் கொண்டிருக்கின்றனர். பெண்களை வேலைக்கு அனுப்பக் கூடாது என்று சொன்னவர்கள் வேலைக்கு அனுப்பினார்கள். பின்னர் மிக மென்மையான பணிகளுக்கு அனுப்பினார்கள். பின்னர் காவல் துறை இராணுவம் போன்ற பணிகளுக்கும் அனுப்பினார்கள். இப்படிப் பெண்ணின் உடல் மீது சொல்லப்பட்ட பொய்யுரைகளை எல்லாம் உடைத்து இன்று பெண்கள் நடை போட்டுக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் மீண்டும் அதே பழைய காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் காரணம் எவ்வளவு பலவீனமானது என்பதை உலகம் அறியும்.

இராணுவத்தில் பணிபுரியும் உயரதிகாரிகளே இதனை மறுத்துள்ளனர். 30 ஆண்டுகளாக இராணுவத்தில் பெண்களுடைய இந்த உடலியல் பிரச்சினைகளை மிகவும் பக்குவமாக இராணுவம் கையாண்டு வந்திருக்கிறது என்று இராணுவத்தில் பணிபுரியும் உயர் அதிகாரிகள் சொல்கிறார்கள். இருப்பினும் இப்படிப்பட்ட வாதங்களை வைக்கும் ஆட்சியாளர்களிடமும் பார்ப்பனிய அதிகாரிகளிடமும் மண்டிக்கிடக்கும் மதக் குப்பைகளையே இந்நிகழ்வு நமக்குக் காட்டுகிறது. மேலும் எதிரிகளால் கைப்பற்றப்படும் போது பெண்கள் அனுபவிக்கும் உடல் மற்றும் மனரீதியான தொல்லைகள் அரசாங்கத்திற்கு மிகவும் அழுத்தமான சூழலை உருவாக்கும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்த வாதங்களை எல்லாம் நீதிபதிகளே கண்டித்து இருக்கின்றனர்.

இந்த வழக்குத் தொடர்ந்த பெண் அதிகாரிகள் இந்திய பாதுகாப்புத்துறையின் அனைத்து வாதங்களுக்கும் தகுந்த பதிலடிகளைச் சான்றுகளுடனும் ஆதாரங்களுடனும் கொடுத்திருக்கின்றனர். கட்டளையிடக் கூடிய 'கர்னல்' என்று சொல்லப்படும் அதிகாரி இல்லாத நேரங்களிலும் அதற்கு அடுத்தபடியான அதிகாரியும் உடல் நலம் இல்லாத நேரங்களிலும் பெண்கள் தலைமை ஏற்றுப் படைகளைச் சிறப்பாக வழிநடத்தி இருக்கின்ற நிகழ்வுகள் இராணுவத்தில் பலமுறை நடந்திருப்பதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இவ்வளவு சான்றுகள், ஆதாரங்கள் இருந்தும் அதிகாரிகளுக்கும் ஆட்சியாளர்களுக்கும் மனம் இல்லை. அதனால் தான் நீதிபதிகள் மிகத் தெளிவாக 'administrative will' மற்றும் 'change of mindset' தேவை என்று மத்திய அரசின் வாதங்களை மறுத்துள்ளனர். இதில் நாம் குறிப்பாகக் கவனிக்க வேண்டியது 'administrative will' என்பதைத்தான். இந்த நாட்டில் ஆட்சியாளர்களைப் போலவே அதிகாரிகளிடமும் பார்ப்பனியம் வேரூன்றியிருக்கிறது. ஆட்சியாளர்கள் கூட வாக்குகளுக்காக மாற்றிப் பேசுவார்கள். ஆனால் நிர்வாகம் செய்யும் பார்ப்பனிய அதிகாரிகளே அவர்களைவிட ஆபத்தானவர்கள்.

பெண் விடுதலைக்காகப் பெண்கள் இன்று நீதிமன்றத்தை நாடி போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த பெண் அதிகாரிகளுக்கு நாம் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்ளலாம். இது குறிப்பிட்ட சில பெண் அதிகாரிகளுக்கான போராட்டம் மட்டுமில்லை. பெண்ணை வீட்டுக்குள்ளேயே அடைத்துவைத்து ஆணைப்பெண்ணுக்கு எஜமானனாக நிறுவிய சமூக கட்டமைப்பின் மீது நடத்தப்படும் ஒரு துல்லியத் தாக்குதல். வேலு நாச்சியாரும், ஜான்சி ராணியும் வரலாற்றில் நிலைத்திருக்கிறார்கள். பெண்ணின் கட்டளையை ஏற்று ஆண்கள் இராணுவத்தில் பணிபுரியும் நாள்களை நோக்கி நாம் நகர்ந்து கொண்டிருக்கிறோம். நம்மை நகர்த்துபவர் "அரசாங்கம் பெண்களுக்குப் போலீஸ் உத்தியோகம் கொடுக்க வேண்டும்" என்று போர்க்குரல் எழுப்பிய பெரியார்.

இதுகுறித்து நீதிபதி சந்திரசூட் தலைமையிலான அமர்வு நேற்று பிறப்பித்த உத்தரவில் ராணுவத்தில் பெண்களுக்குரிய உயர் பதவி குறித்து அரசு சொல்லும் விதிமுறைகள் ஏற்றுக்கொள்ளும்படி இல்லை. ராணுவத்தில் பெண் அதிகாரிகள் நிரந்தரமாகப் பணியாற்ற 3 மாதத்திற்குள் மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளனர். இது கடைசியாகக் கிடைத்த செய்தி. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,